தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 14-1-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடையான மக்காச்சோளத்தை உடனடியாக விற்கலாம்

உலகளவில், மக்காச்சோள உற்பத்தி நடப்பாண்டில் 990 மில்லியன் டன்களாகும். இது மொத்த தேவையான 971 மில்லியன் டன்களை விட அதிகமாகும். வேளாண்மை அமைச்சகத்தின் படி, 2013 - 14ல் இந்தியாவில் மக்காச்சோள உற்பத்தி கடந்த ஆண்டு (2012-13ல்) உற்பத்தியான 22.26 மில்லியன் டன்களைவிட அதிகரித்து 23.29 மில்லியன் டன்களான உள்ளது. மக்காச்சோள சாகுபடி பரப்பு (2012-13ல்) 8.2 மில்லியன் எக்டரிலிருந்து அதிகரித்து நடப்பாண்டில் 8.7 மில்லியன் எக்டராக பயிரிடப்பட்டுள்ளது. இந்தியாவில் மக்காச்சோள ஏற்றுமதி (2012-13ல்) 4.7 மில்லியன் டன்களிலிருந்து குறைந்து நடப்பாண்டில் 2.7 மில்லியன் டன்களாக உள்ளது. தற்போது மக்காச்சோள விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதற்கு குறைந்த ஏற்றுமதி, அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நல்ல விளைச்சலே ஆகும்.

பீகார், ஆந்திரா, மகாராஷ்டிரா, கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு ஆகியவை மக்காச்சோளப் பயிரிடும் முக்கிய மாநிலங்களாகும். தமிழ்நாட்டில் இறவை மற்றும் மானாவாரி சாகுபடி முறையில் பெரம்பலூர், திண்டுக்கல், சேலம், தூத்துக்குடி, விருதுநகர், திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் மக்காச்சோளம் பயிரிடப்பட்டு 72 சதவீதம் சாகுபடி பரப்பு மற்றும் 69 சதவீதம் மொத்த உற்பத்தியில் பங்களிக்கிறது.

ரபீ பருவ (மானாவாரி) மக்காச்சோளம் தமிழ்நாட்டில் (2014-15ல்) திண்டுக்கல் (23,355 எக்டர்), திருப்பூர் (23,033 எக்டர்), விருதுநகர் (17,749 எக்டர்), தூத்துக்குடி (15,000 எக்டர்) மற்றும் திருநெல்வேலி (9,093 எக்டர்) ஆகிய மாவட்டங்களில் மொத்த ரபீ சாகுபடி பரப்பில் 75 சதவீதம் பயிரிடப்படுகிறது. நடப்பாண்டில் மக்காச்சோள சாகுபடி பரப்பு, 2012-13ன் சாகுபடி பரப்பை விட 26 சதவீதம் குறைந்துள்ளது. இதற்கு நல்ல பருவ மழை மற்றும் விவசாயிகள் மாற்றுப்பயிர் முறையில், மக்காச்சோளத்திற்கு மாற்றாக பருத்தி மற்றும் சோளம் பயிரிடுகின்றனர்.

உடுமலைப்பேட்டை, விருதுநகர், அறுப்புக்கேட்டை மற்றும் திண்டுக்கல் ஆகிய பகுதிகளிலிருந்து வரத்து ஜனவரி மத்தியில் தொடங்க உள்ளது. தற்போது கர்நாடகாவிலிருந்து வரும் வரத்து பிப்ரவரி மாதத்தில் முடிவடையும். உடுமலைப்பேட்டை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் தற்போது மக்காச்சோளத்தின் விலை குவிண்டாலுக்கு ரூ.1,170 - ரூ.1,230 வரை உள்ளது.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 12 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய மக்காச்சோளத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது.

விலை மற்றும் வர்த்தக ஆய்வுகளின் அடிப்படையில் தரமான மக்காச்சோளத்தின் விலை (பிப்ரவரி – மார்ச், 2015ல்) குவிண்டாலுக்கு ரூ.1250 - 1300 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. 12 சதவீதத்திற்கு குறைந்த ஈரப்பதம், தூய்மையான, முழுமையான மற்றும் முதிர்ச்சி அடைந்த நல்ல தரமான மக்காச்சோள தானியம் விலையை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளாகும். மேலும், மார்ச், 2015 வரை விலை உயர்வதற்கான வாய்ப்புகள் குறைவு. எனவே, விவசாயிகள் அறுவடை செய்த மக்காச்சோளத்தை உடனே விற்க பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண்: 0422-2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
சிறு தானியங்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண்: 0422-2450507

மக்கள் தொடர்பு அலுவலர்